
# நிர்வாகம் தெரியாதவர்கள் ஆட்சி செய்தால், பொருளாதார வளர்ச்சி எல்லாம் வராது; விலைவாசி தான் உயரும்!

## தி.மு.க. இளைஞரணி விமர்சனம்!




திராவிடமாடல் ஆட்சியில் 3.77% ஆக இருந்த விலைவாசியை, இந்த CircusSarkar–இல் 5.45% ஆக உயர்த்தி, சாமானிய மக்களின் வயிற்றில் அடித்திருக்கிறது. நிர்வாகம் தெரியாதவர்கள் ஆட்சி செய்தால், பொருளாதார வளர்ச்சி எல்லாம் வராது; விலைவாசி தான் உயரும்!

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்திற்கு

# தி.மு.கழக அரசு செய்த சாதனைகளை வரலாறு சொல்லும்!

## சட்டப்பேரவையில் கோவி.செழியன் பேச்சு!

சென்னை, ஆக.28

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்திற்கு தி.மு.க. செய்த சாதனைகள் வரலாறு சொல்லும் என பேரவையில் சமூக நீதித்துறை மானிய கோரிக்கையில் தி.மு.க. சார்பில் கோ.வி.செழியன் பேசுகையில் குறிப்பிட்டார்.



சட்டமன்றத்தில் நேற்று நடைபெற்ற சமூகநீதி துறை மானிய கோரிக்கையின் போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் கோ.வி.செழியன் பேசியதாவது:-

ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மக்கள் நல்வாழ்வு குறித்து சமூக நீதித்துறை சார்பில் இன்றைக்கு இங்கு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, இங்கு அமைச்சர்கள் பேசும்போது, தி.மு.க. ஆட்சியில் ஆதிதிராவிடர் மக்களுக்கு எதையுமே செய்யவில்லை என்று பேசுகிறார்கள்.

எதிர்க்கட்சி என்பது கேள்விகளை கேட்பார்கள் கோரிக்கை வைப்பார்கள், ஆளுங்கட்சி அமைச்சர்கள் அதை செவிமடுத்து உரிய பதில்களை அளிக்க வேண்டும்.

குறிப்பாக ஆளுங்கட்சியினருக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய வார்த்தைகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

“எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு வரும்பொழுது கையில் வெறும் கரண்டியோடு வருவார்கள், ஆனால் ஆளுங்கட்சி அமைச்சர்கள் தான் கையில் உள்ள கரண்டியில் எண்ணெயோடு வர வேண்டும், ஒரு துளி சிந்தினால் கூட அது அரசுக்கு நாட்டுக்கு இழப்பு ஏற்படும் என்பது ஒரு கருத்தாகும்.

இங்கு பேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன செய்து விட்டீர்கள் என்று கேட்டார்.

**சமத்துவ உறுதிமொழி ஏற்பு நாள்!**

அவருக்கு நான் சிலவற்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏப்ரல் 14 அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை சமத்துவ உறுதிமொழிக்கு ஏற்ப நாளாக அறிவித்து தமிழ்நாடு முழுவதும் சாதி சமயம் மறந்து சமத்துவ உறுதிமொழி ஏற்க செய்தது தி.மு.க. அரசு தான்.

அதேபோல் சமூகநீதித் துறை அமைச்சர் தவறான கருத்தை எங்கே பதிவு செய்ய முயற்சிக்கிறார், நாங்கள் எத்தனை பேர் வென்றிருக்கிறோம் எத்தனை பேர் அமைச்சர்களாக இருக்கிறோம் என்று அவர் பதிவு செய்யும் அதே நேரத்தில், உங்களுக்கு முந்தைய திமுக அரசு அந்த சாதனையை நிகழ்த்தி காட்டியுள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன், இங்கு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கு ரூபாய் 25 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார்கள்,

இந்த அவையின் மூலம் நிதித்துறை அமைச்சர் சமூக நீதித்துறை அமைச்சர், பொதுப்பணி துறை அமைச்சர் ஆகியோரை கேட்க விரும்புவதெல்லாம், நீங்கள் சொன்ன நிதி எந்தெந்த திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது, எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது என பட்டியலிட முடியுமா என கேட்க விரும்புகிறேன், எனவே உங்களைப் போல் பெயரளவில் மட்டும் சொல்லிவிட்டு போகிற இயக்கமல்ல திராவிட முன்னேற்ற கழகம், அடித்தட்டு மக்களுக்காக ஆண்டாண்டு காலமாக பாடுபடுகிற இயக்கம், குடிசையில் வாழ்ந்த மக்களை குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கோபுரத்தில் அமர்த்தி காட்டியதுதான் திமுக என்பதையும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்,

இங்கு பேசிய அமைச்சர் தி.மு.க. ஏன் சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தவில்லை என்று கேட்கிறார், முதன்முதலாக பீகாரில் அது போன்று சாதி வாரி கணக்கெடுப்பு எடுத்தார்கள், நீதிமன்றம் தடையாணை விதித்தது, சாதி கணக்கெடுப்பு எடுக்கிற உரிமை ஒன்றிய அரசுக்கு தான் உள்ளது, அவை வலியுறுத்த வேண்டிய கடமை திமுகவிற்கு உள்ளது என்பதுதான் எங்களது நிலை, இங்கு பேசிய பொதுப்பணித் துறை அமைச்சர் 25 ஆண்டு காலமாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு திமுக எதுவும் செய்யவில்லை என்று ஒரு பொதுக் கூட்ட மேடையில் பேசுவது போல பேசினார், அவருக்கு தெரியாதவற்றையெல்லாம் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்,

**கழக ஆட்சியில் கணக்கில் அடங்கா சாதனைகள்!**

ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்தியாவில் முதன்முதலாக தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகள் கட்டித் தந்தது கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது தி.மு.க. ஆட்சியில் தான், இதனை திறந்து வைத்ததும் அப்போதைய ஒன்றிய நிதி அமைச்சர் பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் தான் , திறந்து விட்டு டெல்லி சென்ற பிறகு அப்போதைய பிரதமர் நேரு அவர்களிடம் கலைஞர் அவர்கள் அழைத்ததன் பேரில் தமிழ்நாடு சென்றேன், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பாதுகாப்பான கான்கிரீட் வீடுகளை திறந்து வைத்தேன் என்று கூறியுள்ளார், அதனைக் கேட்ட பாரதப் பிரதமர் நேரு அவர்கள் அதற்குப் பிறகுதான் இத்திட்டம் இந்தியா முழுவதும் விரிவுபடுத்தினார் என்பது வரலாற்று உண்மை,

அது மட்டுமல்ல கடந்த காலங்களில் கோவிலுக்குள் நுழைய முடியாத நிலை இருந்த ஆதிதிராவிடர் சமூகத்தை அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஒரு திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் சமூகத்திற்கு அங்கீகாரம் அளித்தது தி.மு.க. அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வெளிநாட்டில் கல்வி பயில அம்பேத்கர் அயலக கல்வி நிதி உதவி திட்டம் எனஅ முதல் ஃ க்கு வரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு தனது ஒவ்வொரு ஆட்சி காலத்தின் போதும் கணக்கில் அடங்கா சாதனைகளை செய்தது தி.மு.க. அரசு என்பதை இங்கு பதிவுசெய்ய விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.




திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொன்னேரி பகுதியைச் சேர்ந்த தினேஷ், சிலம்பு போட்டியின்போது ஏற்பட்ட விபத்தில் காயமடைந்தார். அவருக்கு மருத்துவ சிகிச்சைக்காக தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் ரூ.25 ஆயிரம் மருத்துவ உதவித்தொகை காசோலையை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்பேரில், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கியதை, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் முன்னிலையில் வழங்கினார். நிகழ்வில் நிர்வாகிகள் பா.து.தமிழரசன், எல்லாபுரம் ராஜேஷ், ஜானகிராமன், வி.ஜி.கோபி, கலைமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இந்திய ஒருமைப்பாடு நடைமுறைப்படுத்த முடியாத நாடோடித் தத்துவமா?

“ஒரே நாடு - ஒரே தேர்தல்” ஒன்றிய பா.ஜ.க அரசின் முழக்கம் “இந்துத்துவாக் கோட்பாட்டின்” “இந்து ராஷ்டிரத் திற்கான” ஒத்திகையாகவே தெரிகிறது!

ஒன்றிய பா.ஜ.க அரசின் திட்டமான “ஒரே நாடு - ஒரே தேர்தல்” (One Nation One Election) (ONOE) திட்டத்தின் தொடக்கமாக இந்திய அரசியல் சட்டத்தில் (Indian Constitution) உரிய சட்டதிருத்தத்தை கொண்டு வருவதன் மூலம் இந்தச் திட்டத்தை நிறைவேற்றி அமல்படுத்துகின்ற முயற்சியில் வெற்றி பெறும் என்பதால் இந்த வரைவு மசோதா (Bill) நாடாளுமன்றத்தின் மூலம் விரிவான விவாதத்திற்கும் பரிசீலனைக்கும் நாடாளுமன்ற கூட்டுக்குழுவிற்கு (Joint Parliamentary Committee) அனுப்பப்பட்டுள்ளது.

அந்த கூட்டுக்குழுவின் தலைவராக பி.பி.சௌத்திரி அவர்கள் நியமிக்கப்பட்டு சமூக அமைப்புகளின் அறிஞர்களையும், சட்ட வல்லுநர்களையும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கலந்தாலோசித்து இந்த வரைவு மசோதா குறித்து விவாதித்து வருகிறார். இந்த நாடாளுமன்ற கூட்டுக்குழுவில் கருத்து தெரிவித்துள்ள முன்னாள் ஒன்றிய அமைச்சரும் வழக்கறிஞருமான ப.சிதம்பரம் அவர்கள் கடுமையாக இந்த வரைவு மசோதாவை எதிர்த்து வாதங்களை முன்வைத்திருக்கிறார்.

ஆனால் அதற்குமுன்னரே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இந்த வரைவு மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட நிலையிலேயே தொடக்கக்காலத்திலிருந்தே எதிர்த்து வந்ததோடு மட்டுமில்லாமல், அதற்கான காரண காரியங்களையும் விரிவாக விளக்கியுள்ளார். அதோடுகூட, “ஒரே நாடு - ஒரே தேர்தல்” என்ற சட்டம் நிறைவேற்றப்படு மேயானால், இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமை (National Integration) சீர்குலைக்கப்பட்டு, காலப்போக்கில் வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity) என்பது சிதறுண்டுப் போவதற்கான வாய்ப்புகளும் விரும்பத்தகாத அரசியல் கொந்தளிப்புகளும், சூழ்நிலைகளும், குழப்பங்களும் நிச்சயமாக உருவாகும் என்பதை ஆழ்ந்த தொலைநோக்குச் சிந்தனையுடன் தீர்க்க தரிசனமாக தெரிவித்துள்ளார்.



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

இந்த வரைவு மசோதாவிற்கு நாடு முழுவதும் உள்ள முற்போக்கு சிந்தனைக்குழு (ThinkTank) பல்வேறு முனைகளில் எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும், நாடாளுமன்ற கூட்டுக்குழு தலைவர் பி.பி.சௌத்ரி அவர்களின் கருத்தும் முனைப்பும் எப்படியாவது இந்திய அரசியல் சட்டத்தில் அதற்கான திருத்தத்தை கொண்டு வந்தே தீருவது, அதன் மூலம் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற ஒன்றிய அரசினுடைய கனவுத்திட்டத்தை நிறைவேற்றும் நோக்கில்தான் அவரது நடவடிக்கைகள் உள்ளது என்று அனுமானிக்கத்தக்க முறையில் அவர் தனது கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்து வருகிறார் என்ற செய்தி 25.08.2026 “இந்து” ஆங்கில நாளேட்டில் வெளிவந்துள்ளது.

அந்தச் செய்தியின் உள்ளடக்கம் என்பது நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் தலைவர் சௌத்ரி அவர்கள் தன்னுடைய குழுவிற்குமுன் வருகைதந்து கருத்து தெரிவித்த அரசியல் கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகள் பலரும் வேறுபட்ட விளக்கங்களையும், முரண்பட்ட கருத்துக்களையும் முன்வைத்து தெரிவித்திருந்தாலும், நாட்டினுடைய நலன்கருதி நாடாளுமன்ற கூட்டுக்குழு தன்னிச்சையான முடிவுகளை மேற்கொள்ளும் என்றும் மேலும் நாடாளுமன்றம், வரைவு மசோதாவிலுள்ள குறைபாடுகளை தவிர்த்துவிட்டு, ஒரே காலத்தில் நாடாளுமன்றத்திற்கும் - மாநில சட்டமன்றங்களின் தேர்தல்களை நடத்திட வழிவகை காணுமாறு கட்டாயப்படுத்தியுள்ளது (Mandated) என தெரிவித்துள்ளார்.

(Mr.Chaudhary said there may be different opinions of political parties, but the committee has to work together in the interest of the country. Mr.Chaudhary said the parliament mandated the committee to fix the shortcomings, if any, and make sure that the simultaneous polls are held successfully).

(Ref : The Hindu dated on 25.08.2026 page no.12 - Reported by Press Trust of India)

நாடாளுமன்ற கூட்டுக்குழுத் தலைவரின் இந்த விளக்கம் மூலம் அறியப்படுவது எதுவெனில், கட்டாயமாகவும் அல்லது உறுதியாகவும் ஒரே காலக்கட்டத்தில் நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடைபெறும் என்ற செய்தியாகும். இத்தகைய ஒரு தலைப்பட்சமான முடிவால் எதிர்காலத்தில் இந்தியா ஒன்றியத்தில் உருவாகும் விரும்பத்தகாத எதிர்விளைவு களைப்பற்றி ஒன்றிய பா.ஜ.க அரசு கிஞ்சிற்றும் சிந்தித்ததாகவும், கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை என்பது இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளைச் சீர்குலைத்து (Basic Structure of the Constitution) தங்களுடைய “இந்துத்துவாக் கோட்பாட்டையும்”, “இந்துராஷ்டிர” கனவையும் நனவாக்கி நிறைவேற்றிக் கொள்ளும் ஏகாதிபத்திய முயற்சியாகத்தான் கருதமுடியும்.

டாக்டர்.அம்பேத்காரால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தின்மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசு தற்பொழுது இந்திய அரசியல் சட்டம் உருவாக்கியிருக்கும் தேர்தல் முறைகளில் தங்களின் திரைமறைவு திட்டங்களில் ஒன்றான “ஒரே நாடு - ஒரே தேர்தல்” என்பதை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக பல்வேறு அதிதீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

“ஒரே நாடு - ஒரே தேர்தல்” என்ற ஒன்றிய அரசின் இந்த திட்டத்திற்கு ஆதரவாக சொல்லப்படுவது நாடாளு மன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் தனித்தனியாக வெவ்வேறு காலகட்டங்களில் பொதுத்தேர்தல் நடத்துவதால் ஒன்றிய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் செலவினங்கள் அதிகமாக உயர்ந்துகொண்டே போவதோடு ஒன்றிய மாநில அரசுகளின் வேறுபல அத்தியாவசிய பணிகளும் தள்ளிப் போகின்றன என்ற வாதமாகும். ஆனால் பெரும்பான்மை மக்களின் ஆதரவோடு உருவாக்கப்படும் ஆட்சிமுறை தான் ஜனநாயக ஆட்சிமுறையாகும். இந்த மக்களாட்சி முறைப்பற்றி அரசியல் அறிஞர்களின் பார்வை என்பது தற்பொழுது நடைமுறையில் உள்ள வெவ்வேறு ஆட்சிமுறைகளில் குறைந்த குறைபாடுகள் கொண்ட ஆட்சிமுறை ஜனநாயக ஆட்சிமுறை என்பதாகும்.

எனவேதான், இந்திய குடிமக்களாகிய நாம் ஜனநாயக குடியரசு ஆட்சிமுறையை பின்பற்றி வருகிறோம். இந்த மக்களாட்சி முறையில் செலவினங்களைப்பற்றி கவலைப் படாமல், நாம் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு முக்கிய காரணம் நடைமுறையில் இருக்கின்ற ஆட்சிமுறைகளில் இதுதான் சிறந்த ஆட்சிமுறை என்ற தீர்க்கமான முடிவுடன்தான் செலவினங்களைப்பற்றி கவலைப் படாமல், ஜனநாயக ஆட்சிமுறையை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். (Democracy itself is a Costly Affair)

அதுமட்டுமல்ல, இந்திய ஒன்றியம் என்பது ஒரு துணைக் கண்டம் என்பதாகத்தான் நிலவியல் ஆய்வாளர்கள் மற்றும் பூகோல ஆய்வாளர்கள் ஆகியவர்களின் தீர்க்கமான முடிவாகும். எனவே, உயரிய பண்புகள், கலாச்சார தன்மை கொண்ட வேறுபட்ட மக்கள் வாழும் பல்வேறு பகுதிகளை ஒன்றிணைத்து ஒரே குடையின்கீழ் ஆட்சிசெய்யும் ஆளுமைக்கு பொருத்தமான ஆட்சிமுறை ஜனநாயக குடியரசு ஆட்சிமுறைதான் என்பதை இந்திய அரசியல் சட்ட நிர்ணய சபை விவாதித்து முடிவெடுத்து நம்முடைய அரசியல் சட்டத்தை உருவாக்கினார்கள் என்பதே இந்திய அரசியல் சட்டத்தின் வரலாறாகும்.

எனவே, இந்திய ஜனநாயக ஆட்சிமுறையை ஏதேனும் ஒரு வகையில் சேதப்படுத்தப்பட்டு, “ஒரே நாடு - ஒரே தேர்தல்” என்பது பல்வேறு கலாச்சாரங்களை உள்ளடக்கிய நடைமுறைக்கு வருமேயானால், பல்வேறு மொழி பேசுகின்ற, பன்முகத்தன்மை கொண்ட இந்திய துணைக் கண்டத்தில் “வேற்றுமையில் ஒற்றுமை” என்பது நடைமுறைப்படுத்தவியலாத நாடோடி தத்துவம் ஆகி விடுமோ? என்ற அச்சம் இந்திய ஒன்றிய மக்கள் அனைவரின் உள்ளங்களில் உருவாகியுள்ளது.





விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பெரிய பள்ளி மசூதியில் மிலாடி நபியை முன்னிட்டு 3000 பேருக்கு பொது விருந்து வழங்கும் நிகழ்ச்சியை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி வட்ட ஜமாத் தலைவர் சையத் மஜித் பாபு, செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.